

பள்ளி, கல்லூரி மாணவர்கள் உறுதிமொழி ஏற்பு

போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு: ஸ்டாலின் உறுதி

சென்னை, ஆக.11–

போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை நிச்சயம் உருவாக்குவோம் என்று முதலமைச்சர் ஸ்டாலின் உறுதிபட கூறினார்.

போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என பள்ளி, கல்லூரி மாணவர்கள் முதலமைச்சர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்தனர்.முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்து கொண்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால் இந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மேலும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகியவற்றை இணைத்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "அமலாக்கப் பணியகம் – குற்றப் புலணாய்வு துறை" என்ற புதிய பிரிவை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

"போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன் என்று உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமலாக்கப் குற்றப்புலனாய்வு துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார குறும்படத்தை முதலமைச்சர் வெளியிட்டார். போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகளை விளக்கிடும் இவ்விழிப்புணர்வு குறும்படம் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படும். மேலும், போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாணவர்களை எளிதாக சென்றடைய அவர்களை கவரும் வகையில் பாடல் காணொலியும் வெளியிடப்பட்டது.

13 ஆயிரம் கிலோ கஞ்சா அழிப்பு

தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வழக்குகளில் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 13,000 கிலோ கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி இன்று அழிக்கப்பட்டது.

"போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உருவாக்கிடும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட போதைக்கு எதிரான மாணவர் குழுக்களும் (AntiDrug Clubs), நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் (NSS), தேசிய மாணவர் படை (NCC) மற்றும் இதர மாணவர்கள் இயக்கங்களின் மூலம் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்ள சிறப்பு தன்னார்வலர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் 22,447 குற்றவாளிகளுக்கு எதிராக 16,023 வழக்குகள் பதியப்பட்டு 42,337 கிலோ கஞ்சா, 1.234 கிலோ ஹெராயின், 74,412 போதை மாத்திரைகள் மற்றும் 223 கிலோ பிற போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள் மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுடன் முதலமைச்சர் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசியதாவது:–

தமிழ்நாட்டில் போதை பொருள் குற்றச்சம்பவங்கள் வெகுவாக குறைந்து கொண்டு வருகிறது. அதற்காக, முழுவதுமாக தடுத்துவிட்டோம் என்று சொல்ல வரவில்லை.

முற்றிலுமாக போதைப் பொருட்கள் நடமாட்டத்தை தடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். போதைப் பழக்கம் என்பது, அதை பயன்படுத்துகிறவர்கள் மட்டுமில்லாமல், அவர்கள் குடும்பத்தினருக்கும், சமூகத்துக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற ஒரு கொடிய நோய்.

தனி மனிதருடைய வாழ்க்கையில் மட்டுமில்லை – மாநிலத் வளர்ச்சியிலேயும் மிகப்பெரிய பாதிப்பை அது ஏற்படுத்தும். போதைப் பொருளைச் சார்ந்திருக்கக் கூடியவர்களுக்கும், போதைக்கு அடிமையானவர்களும் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பெரும் சுமையாக இருக்கிறார்கள். அதனாலதான், ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை தடுக்கின்ற நடவடிக்கையில் நாங்கள் தீவிரமாக இறங்கி இருக்கிறோம்.

போதைப்பொருள் விற்பனையில் தொடர்ந்து ஈடுபடக்கூடிய யாராக இருந்தாலும், அவர்கள் மேல் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. 2022 ஆகஸ்ட் 11 அன்று, மாபெரும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, 70 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்ததோடு, போதைப்பொருளுக்கு எதிரான போருக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கிறதாக இருந்தது. சொத்துக்கள் முடக்கம்

நிதி தொடர்பான விசாரணை– சொத்துகள் மற்றும் வங்கிக் கணக்குகளை முடக்குதல் போன்ற நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நிதி தொடர்பான விசாரணை நடத்தப்பட்டு, உரிய சட்டத்தின்கீழ் அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகள் முடக்கப்படுகிறது.

இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு 16 ஆயிரம் கிலோ கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் அழிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஓராண்டில், NDPS சட்டவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருக்கிறது.

கஞ்சா சாகுபடி இல்லா தமிழ்நாடு

கஞ்சா சாகுபடி இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை தமிழ்நாடு இப்போது தொடர்ந்து பராமரித்து கொண்டு வருகிறது. ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, தெலங்கானா மற்றும் இந்தியாவோட வடகிழக்கு மாநிலங்களிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதுதான், தமிழ்நாட்டுக்கு கஞ்சா நுழைய முக்கிய ஆதாரமாக இருக்கிறது.

இதையெல்லாம் கவனத்தில் வைத்து, அதை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

ஒவ்வொரு காவலரும் தனது காவல் நிலைய எல்லையில் போதை மருந்து விற்பனையை முற்றிலுமாக தடை செய்ய உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாக தடுத்தாக வேண்டும்.

மலையடிவாரங்களில் கண்காணிக்க வேண்டும். ண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வருவதை தடுத்தாக வேண்டும். எல்லை மாவட்டங்களினுடைய சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்த வேண்டும்.

கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும். காவல்துறையினருடைய ரோந்து அதிகரிக்க வேண்டும். அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகின்ற இடங்களில் நிரந்தரமாக கண்காணிக்க வேண்டும். பள்ளி, கல்வி நிறுவனங்களுக்கு அருகில் போதைப் பொருள் விற்கப்படுவதை தடுக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரிகளில் 'போதைப்பொருள் எதிர்ப்பு மன்றம்' அமைத்து, அந்தக் கல்வி நிறுவனத்தை போதைப்பொருள் இல்லாத வளாகமாக அறிவிக்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என்று நம் எல்லாரும் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

நீங்கள் என்ன தான் பணம் சம்பாதித்தாலும் நல்ல உடல்நிலை இருந்தால்தான் உங்களால் தொடர்ந்து உழைக்கவும் முடியும், சம்பாதித்த பணத்தை வைத்து சந்தோஷமாக இருக்கவும் முடியும். இதுதான் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுரையாக வழங்கவேண்டும் என்று இந்த தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்

போதை ஒழிப்பைப் பொறுத்தவரை, தடுப்பு நடவடிக்கைகளும், விழிப்புணர்வு பிரச்சாரமும் ஒரு சேர நடக்க வேண்டும். காவல் துறையும், பொதுமக்களும் ஒரே நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

இந்த நான்கும் நேர்கோட்டில் இணைந்தால் போதை இல்லாத தமிழ்நாட்டை நிச்சயம் உருவாக்கலாம்! உருவாக்குவோம்!

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உறுதிமொழி ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் க. பொன்முடி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, உள்துறை முதன்மைச் செயலாளர் பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்திப் ராய் ரத்தோட்,

கூடுதல் இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் புதிதாக 47 பேருக்கு கொரோனா

டெல்லி, ஆக. 11–

இந்தியாவில் கொரோனா பாதிப்பு விவரங்களை ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் நாள்தோறும் வெளியிட்டு வருகிறது. அதன்படி, நேற்று முன்தினம் 39 பேருக்கு கொரோனா பாதித்த நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 47 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் தொற்று பாதித்தோரின் மொத்த எண்ணிக்கை 4,49,96,198 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 1505 ஆக உள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக யாருக்கும் கொரோனா கண்டறியப்படாத நிலையில் 5 பேர் சிகிச்சையில் உள்ளனர். இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் கொரோனாவுக்கு யாரும் உயிரிழக்கவில்லை. இதனால் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 5,31,920 ஆக தொடர்கிறது என்று இந்திய குடும்ப நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE months thereafter I, M.GIRIPRAKASH, S/O.V.MURUGAIYAN, aged 30 years, permanently Residing at No.21A, Ramanathan Nagar Extn, Pozhichular Chennai-600074. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may Notify the same to the Bar Council within 10 days.

M.GIRIPRAKASH

பெயர் மாற்றம்

Sharon Bennihin Boominathan Moses, தந்தை பெயர்: Boominathan, பிறந்த தேதி: 16.07.2004, நெ.8/21, பஜனை கோயில் தெரு, சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை– 600 026, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Sharon Bennihin Boominathan,** என்று அழைக்கப்படுகிறேன்.

Sharon Bennihin Boominathan Moses

பெயர் மாற்றம்

Hina Vernica Emerson, தந்தை பெயர்: Emerson Alex, பிறந்ததேதி 27.01.2019, நெ.898/4, சுவாமிநாதன் நகர் 3வது மெயின் ரோடு,கொட்டிவாக்கம், சென்னை– 600 041, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி Given Name: **HINA VERNICA** Surname: **EMERSON,** என்று அழைக்கப்படுகிறார்.

Stefi Merin, தாய்

பெயர் மாற்றம்

ANI ROY JULISTON, தந்தை பெயர்: Terrence Rayan, பிறந்த தேதி: 11.08.1985, நெ.A4, Greenwoods Villa, அப்துல் கலாம் 3வது தெரு, கனத்தூர், சென்னை– 603 112, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Given Name: **ANI** Surname: **ROY,** என்று அழைக்கப்படுகிறேன்.

ANI ROY JULISTON

Before The Hon'ble Special Judge II Motor Accident Claims Tribunal at Chennai.
M.C.O.P.No. 3242 Of 2022

Arun kumar ..Petitioner
-VS-
1.S.Amal Subash
2.SBI General Insurance Co. Ltd. ... Respondents

NOTICE

Whereas the above Petitioner has filed the above M.C.O.P.No.3242 of 2022 against you for compensation of Rs.5,00,000/- (Rupees Five Lakhs Only).
Please take notice that the above M.C.O.P.No.3242 of 2022 is posted for appearance of Rl, before the Hon'ble Special Judge II Motor Accident Claims Tribunal at chennai on 21.08.2023 at 10.30 A.M.
Therefore you are hereby requested to be present on that day either in person or through an advocate or otherwise orders will be passed in your absence.

Durai Kannan
Counsel for Petitioner

4-வது நீதிபதி
மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம், சென்னை-600 104.
மனு எண் 1420/2023

A.பாரதி ...மனுதாரர்
எதிர்
A. மோகன்ராஜ் மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்கள்

பெறுனர் : A. மோகன்ராஜ்
எண். 1/81, பிள்ளையார் கோயில் தெரு, மாம்பாக்கம்,
சென்னை-600048

மேற்கண்ட வழக்கு தங்களின் வருகைக்காக 18.09.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களின் அட்சேபனையை தெரிவிக்கவேண்டும். தவறினால் மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

கே. இரவிக்குமார்
வழக்கறிஞர்

Before The Hon'ble I Additional Family Court At Chennai
O.P. No.2263 of 2020

G.Y. Srimathi --Petitioner
-VS-
Nithiya Kumar - Respondent

To,
Nithiya Kumar. S/o. Mahalingam
No.33/16, Karpaga Kanni Amman Kovil 3rd Street
Triplicane, Chennai - 600005 ...Respondent

Please take notice that in the above in O.P.No.2263 of 2020 filed by the petitioner herein to dissolving the marriage of the petitioners which was solemnized on 12.02.2010 at Nalvalvu Marriage Hall. Avvai shanmugam Salai, Royapettah, Chennai -600014 and the Hon'ble I ADDL Family Court at Chennai was pleased to effect service to you through paper publication and adjourned the matter to 2.09.2023 for your appearance. Kindly be presented at 10.30 AM on 2.09.2023 at the above mentioned court either in person or through your pleader without fail.

G.Y.Srimathi,
Petitioner in person

BEFORE THE HON'BLE II ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
O.P. No.5837 of 2022

R.Keshor Kumar,
S/o.Mr.V.Raj Kumar,
No. 5/21, 3rd Cross Street,
Balaji Nagar, Kolathur,
Chennai- 600099. ...Petitioner
-Vs-
V.Saranya, W/o.Mr.Keshor Kumar,
D/o. Mr.K.R.Vijayaraghavan,
No.463, Part 2,
Mayilai Balaji Nagar,
Pallikaranai, Chennai – 600100. ...Respondent

To
V. Saranya,
W/o.Mr.Keshor Kumar,
D/o. Mr.K.R.Vijayaraghavan,
No.463, Part 2,
Mayilai Balaji Nagar,
Pallikaranai, Chennai – 600100.

Take notice that in the above O.P.No.5837of 2022 filed by the Petitioner against you for Restitution of Conjugal Rights, the Hon'ble II Addl. Judge Family Court, at Chennai has ordered notice to you returnable by 25.09.2023. You are hereby called upon to appear before the II Addl. Judge Family Court at Chennai in person on 25.09.2023 at 10.30 a.m. failing which the matter will be decided exparte.

R.Keshor Kumar,
Petitioner

இளங்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

(CIN : L27104TN1989PLC017042)

பதிவு அலுவலகம் : எண்.5, ரங்கநாதன் தோட்டம், 15வது மெயின் ரோடு விரிவு, அண்ணா நகர், சென்னை 600 040.
Website:elangoindustries.com E-mail: admin@kaveripower.com

ஜூன் 30, 2023-ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூபாய் லட்சங்களில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
	30.06.2023	31.03.2023	30.06.2022	31.03.2023
	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)
செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	193.14	2.35	2.10	5.67
வரிக்கு முந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	0.48	(2.80)	(5.29)	(14.64)
வரிக்கு பிந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	0.37	(3.07)	(5.33)	(15.08)
இதர விரிவான வருமானம்	-	-	-	-
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்	0.37	(3.07)	(5.33)	(15.08)
சம பங்கு மூலதனம் (ஒரு பங்கின் முக மதிப்பு ரூ.10/–)	382.16	382.16	382.16	382.16
மறுமதிப்பீட்டு கையிருப்புகளைத் தவிர்த்து மற்ற பங்குகள்	31.61	31.24	40.99	31.24
ஒவ்வொன்றும் ரூ.10/- மதிப்புள்ள ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை மற்றும் பலமிழந்தது இபிஎஸ் (வருடாந்திரம் அல்ல)	0.01	(0.08)	(0.14)	(0.40)

குறிப்பு :

1. மேற்குறிப்பிட்டவைகள் 2015ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்குறிப்பிட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கத்தின் முழு படிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.elangoindustries.com-லும் காணலாம்.
2. ஜூன் 30, 2023 அன்றுடன் முடிந்த மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள், கம்பெனியின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் மறுஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஆகஸ்ட் 10, 2023 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

இயக்குனர்கள் குழுவிற்காகவும் அதன் சார்பாகவும்
இளங்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/- S. இளங்கோவன்
நிர்வாக இயக்குனர்
DIN:01725838

இடம்: சென்னை
தேதி : ஆகஸ்ட் 10, 2023

நரேந்திரா புராபர்டீஸ் லிமிடெட்

NPL

[CIN: L70101TN1995PLC031532]

பதிவு அலுவலகம்: மக்கன்ஜி ஹவுஸ், 2வது தளம், புதிய எண்.49,
பழைய எண்.25, பர்னபி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.

30 ஜூன் 2023ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

பகுதி 1 — ரூ. லட்சத்தில்

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு	முடிந்த காலாண்டு
		30.06.2023	30.06.2022
		தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	300.580	0.021
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	67.177	-38.660
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	67.177	-38.660
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	67.151	-38.694
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு முன்) உள்ளடக்கியது)	67.151	-38.694
6	சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–)	710.640	710.640
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக கடந்த ஆண்டு தணிக்கையான நிதி நிலை அறிக்கையில் உள்ளபடி)	2876.100	2446.297
8	ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை & டைலூடட்(ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) (காலாண்டு கணக்குகள் வருடாந்திரமல்ல)	0.944	-0.544

குறிப்புகள்:

SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான தணிக்கை செய்யாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான தணிக்கை செய்யாத நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.narendraproperties.com–ல் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
சிராக் N மஹர்
நிர்வாக இயக்குனர் (DIN: 00078373)

இடம் : சென்னை
தேதி : 10.08.2023

INDUS FINANCE LIMITED

REGD Office: "KOTHARI BUILDINGS", 4TH FLOOR, 114, M.G.ROAD, NUNGAMBAKKAM, CHENNAI – 600 034. Ph: 044-28331310. Email: contact@indusfinance.in

(CIN No. L65191TN1992PLC022317)

EXTRACT OF UN-AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2023

Rs. in Lakhs

Particulars	Quarter Ended			Year Ended
	30-06-2023	31-03-2023	30-06-2022	31-03-2023
	Un-Audited	Audited	Un-Audited	Audited
Total income from operations (Gross)	66.69	12.70	52.59	262.67
Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items)	23.29	-52.09	5.05	39.30
Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items)	23.29	-52.09	5.05	39.30
Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items)	23.29	-52.09	5.05	39.30
Total Comprehensive Income for the period (Comprising Profit/Loss for the period (after tax) and other comprehensive Income (after tax))	57.81	-246.03	-171.35	-292.22
Paid up Equity Share Capital of Rs. 10/- each	925.83	925.83	925.83	925.83
Reserves (excluding Revaluation Reserve)				974.61
Earnings Per Share (of `Rs.10/- each) (for continuing and discontinued operations)				
Basic (in Rs.):	0.25	-0.01	0.04	0.42
Diluted (in Rs.):	0.25	-0.01	0.04	0.42

Notes:

1. The above is an extract of the detailed format of the Financial Results for the Quarter and Financial Year ended on 30th June 2023 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full formats of the Financial Results were reviewed by the Audit Committee and approved at the Meeting of the Board of Directors of the Company at the Meeting held on 10th August, 2023 and the same is available on the Stock Exchange website. (www.bseindia.com) and Company's Website www.indusfinance.in

For **INDUS FINANCE LIMITED**
Sd/-
Bala Venckat Kutti,
Chairman

Place : Chennai
Date : 10.08.2023

ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்

OEG INDIA

பதிவு அலுவலகம்: ஏ, 5வது தளம், கோகுல் ஆர்கேட்– கிழக்கு விங், எண். 2 மற்றும் 2ஏ, சர்தார் பட்டேல் ரோடு, அடையார், சென்னை 600 020. Tel: 044-43949300, Web Site : www.oegglobal.com,
Email Id: natarajan@oegindia.com CIN: L40100TN1994PLC028309

30 ஜூன் 2023–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்) (ஒரு பங்கு தரவு தவிர)

வ எண்	விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
		முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு
		தணிக்கையாகாதது		தணிக்கை யானது	தணிக்கையாகாதது		தணிக்கை யானது
		30.06.2023	30.06.2022	31.03.2023	30.06.2023	30.06.2022	31.03.2023
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	6075.68	5995.33	25185.90	6348.81	6345.15	26345.13
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	373.47	398.15	1376.23	325.58	446.17	1253.42
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	373.47	398.15	1376.23	325.58	446.17	1253.42
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	279.47	298.15	1057.22	214.18	326.57	857.92
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	279.47	298.15	1307.95	214.18	326.57	1070.94
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	1304.18	1304.18	1304.18	1304.18	1304.18	1304.18
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)	5137.56	3848.29	4858.09	6449.62	5552.07	6235.43
8	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	1. அடிப்படை	2.14	2.29	10.03	1.64	2.50	8.21
	2. டைலூடட்	2.14	2.29	10.03	1.64	2.50	8.21

குறிப்பு

a) மேற்கண்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, 10 ஆகஸ்ட், 2023 அன்று நடைபெற்ற அவர்களின் கூட்டங்களில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் 30.06.2023ல் முடிவடைந்த காலாண்டிற்கான இந்த நிதி முடிவுகள் குறித்த தணிக்கை அறிக்கையை தகுதியற்ற கருத்துடன் வழங்கியுள்ளனர்.

b) நிறுவனம் முதன்மையாக மின் உற்பத்தி நிலையங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளது.

c) இந்த நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட தொடர்புடைய விதிகள் மற்றும் 5 ஜூலை 2016 தேதியிட்ட CIR/CFD/FAC/62/2016 என்ற சுற்றறிக்கையால் மாற்றியமைக்கப்பட்ட பட்டியல் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

d) முந்தைய கால புள்ளிவிவரங்கள் தேவையான இடங்களில் மறுவகைப்படுயத்தப்பட்டன/மீண்டும் தொகுக்கப்பட்டன/மீண்டும் கூறப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
எஸ்.வி. நடராஜன்
தலைமை நிதி அதிகாரி

இடம்: சென்னை
தேதி : 10 ஆகஸ்ட், 2023